ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1994). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிற நேரத்தில் நகர்புற நில உச்சவரம்பு, விவசாய நில உச்ச வரம்பு சட்ட திருத்தமானது பல்வேறு நிலைகளில் பல்வேறு திருத்தங்கள் செய்தும் கூட நமக்குத் தேவையான நிலம் கிடைக்காத ஒரு நிலை இருப்பதை இந்த அரசு நன்கு அறியும். சட்டத் திருத்தம் என்ற பெயரில் 1991 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டம் திருத்தி அனுப்பப்பட்டு இது வரையில் அந்தச் சட்டம் நிறைவேற்றப்படாத காரணத்தால் நிலஉச்ச வரம்பு மூலம் நிலம் நமக்கு கிடைக்கவில்லை. அதற்குத் தகுந்த முறையில் நல்ல சட்ட நிபுணர்களை ஆலோசித்து நிலத்தை கையகப்படுத்துகிற வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் நகர்ப்புற நில உச்ச வரம்பு பொறுத்தவரையில் சென்னையின் புறநகர்ப் பகுதிளில் இருக்கிற நிலங்கள் எல்லாம் நகர்ப்புற நில உச்சவாரம்புச் சட்டத்தின்கிழ் வந்தாலும் கூட நகர்ப்புற நில உச்ச வரம்பில் இன்றைக்கு பல்வேறு விதிவிலக்குகளைக் கொடுத்தாலும் அவற்றின் மூலம் நகர்ப்புறத்தில் இருக்கிற

@25.4.1994..ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏழையெளிய மக்களுக்கு நிலத்தை கையகப்படுத்தி கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. பல்வேறு தொழில்களுக்கு நாம் நகர்ப்புற நில உச்ச வரம்பில் விதிவிலக்குகளைக் கொடுத்தாலும் அந்தத் தொழில்கள் சிறப்பான முறையில் நடைபெறுகின்றனவா என்பதைப் பார்க்கிறபோது 6 மாதங்களுக்கு ஒருமுறை அந்தத் தொழிற்சாலை நடைபெறுகிறது என்று சான்றிதழ் வழங்க வேண்டிய நிலை இருக்கிறது. அந்தச் சான்றிதழ் வாங்குவதற்கு, பெறுவதற்கு அந்த தொழிலதிபர்கள் மிகவும் தொல்லைக்கு உள்ளாவார்கள் பல்வேறு இடங்களில் விவசாய நிலங்களாக இருந்து தொழிற்சாலைகளை அமைக்கிறார்கள். அப்படி அமைக்கிறபோது அந்த விவசாய நிலங்கள் தொழிற்சாலை நிலங்களாக மாற்றப்பட்டு அதற்குப் பின்னால் தொழிற்சாலை ஏதாவது காரணத்தால் நிறுத்தப்படுமானால் திரும்பவும் அந்த நிலத்தை விவசாயத்திற்குக் கொண்டு வருகிற நிலை ஏற்படுகிறது. அப்படி மோசமான நிலையில் இருக்கிற நிலங்களை பெரிய அளவில் பள்ளமாக இருக்கிற நிலங்களை எல்லாம் திரும்பவும் எடுத்து விவசாய நிலங்களாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்தத் திருத்தத்தை வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நில உச்சவரம்புச் சட்டம் என்பது அன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் காமராஜர் அவர்கள் காலத்தில் கொண்டு வந்து, அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் கொண்டு வந்து, இப்போது விவசாய நிலம் என்பது ஒரு விவசாயி 15 தரை ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று ஒரு நிர்ணயம் வந்திருக்கிறது. அப்போது நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்த காலத்தில் அந்த நிலமானது பெரிய பெரிய நிலப்பிரபுக்கள், ஜமீன்தார்கள் போன்றவர்களின் கையில் இருந்தன. அன்றைக்கு அந்த கிராமங்களில் செல்வாக்கு படைத்தவர்களாக, கிராமத்தையே ஆட்டிப்படைக்கக்கூடிய சக்தி படைத்தவர்களாக, பாரம்பர்யமான முறையில் அவர்கள் இருந்து கொண்டு இருந்தார்கள். அப்படிப்பட்ட நிலை இன்றைக்கு மாறி, இன்றைக்கு நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள், உண்மையில் உழைப்பவர்களாக, அந்த நிலத்தில் விவசாயம் செய்து விவசாயத்தில் அதிக உற்பத்தி செய்பவர்களாக மாறி இருக்கிறார்கள்.

1991 மே 4] [திரு. நா. சா. பழனிசாமி]

நண்பகல் 12-00

இன்றைக்கு விஞ்ஞான ரீதியிலே விவசாயத்தைச் செய்ய வேண்டும் என்றால், அந்த விவசாயம் நிலம் என்பது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அதிகமாக இருந்தால்தான் டிராக்ட்டர் போன்ற இயந்திரங்கலளை வைத்து அவர்கள் விவசாயம் செய்ய முடியும். 30 ஆண்டுகளுக்கு முன்பு, நில உச்ச வரம்புச் சட்டம் வந்த காலத்திலே, அதை வேறு ஒருவருக்கு மாற்றியவர்கள், பினாமி என்ற பெயரிலே அந்த நிலத்தைக் கொடுத்தவர்கள் எல்லாம் அவர்களுக்கு வேண்டிய பணத்தை மற்றதை எல்லாம் பெற்றுக் கொண்டார்கள். இன்றைக்கு இந்தச் சட்டத்தால் யார் பாதிக்கப்படுவார்கள் என்றால், அந்த நிலத்தை அவர்களிடமிருந்து வாங்கி, இன்று அந்த நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்து கொண்டிருப்பவர்களும், அந்த நிலத்திலே பல்வேறு தொழிற்சாலைகளை, வீடுகளைக் கட்டி, அதிலே குடியிருந்து வருபவர்கள் தான் உண்மையிலேயே பாதிக்கப் படுவார்கள். இன்றைக்குப் பொருளாதார சிந்தனை என்பது மாறி இருக்கிறது. ஒரு கால கட்டத்திலே இடது சாரி தத்துவம்தான் சரியான முறை என்றும் உழுபவனுக்கே நிலம் என்ற கொள்கைதான் சரி என்றும் இருந்த சூழ்நிலை மாறி, இன்றைக்கு வலதுசாரிப் பொருளாதாரம், சந்தைப் பொருளாதாரம், அது எந்தத் தொழிலாக இருந்தாலும், அந்தத் தொழில் இலாபகரமாக நடக்க வேண்டும், அந்தத் தொழிலுக்கு இந்த நிலம் போதுமான அளவிற்கு இருக்கவேண்டும் என்ற கொள்கை வலுப் பெற்றிருக்கிறது. நம்முடைய தமிழக முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கூட தொழில் அதிபர்கள் கூட்டத்திலே பேசுகின்ற போது, நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம் கூட தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்குமானால், அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு தயக்கம் காட்டாது என்ற வகையிலே கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள்.

அதைப்போல விவசாயத்திற்கும், விவசாயத்தினுடைய வளர்ச்சிக்கும ஒரு சட்டம் என்பது அடிப்படையிலே பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்குமானால், அந்தச் சட்டத்தை நாம் மறுபரிசீலனை செய்தாக வேண்டும். நில உச்சவரம்பு கூடாது என்று சொல்லவில்லை. இன்றைக்கு இந்த நில உச்ச வரம்பு சட்டம் என்பதை மிகவும் காலம் கடத்தி இதை நாம் கொண்டு வந்து இருக்கிறோம். இன்றைக்கு நிலத்தினுடைய தன்மைகள் மாறி இருக்கின்றன. அரசின் பொருளாதாரக் கொள்கைகள் மாறியிருக்கின்றன. நிலத்தை உபயோகப் படுத்தும் நபர்கள் மாறி இருக்கிறார்கள். இன்றைக்கு ஜமீன் தார்கள், நிலப்பிரபுக்கள் போன்றவர்கள் நாட்டிலே ஒழிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையில் இந்தச் சட்டம் என்பது மறு பரிசீலனைக்கு உரியதாக இருக்கிறது என்று சொல்லி, இந்தச் சட்டத்தால் உண்மையில் உழுபவர்கள் அதைப் பண்படுத்தி இருப்பவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற

கருத்தைச் சொல்லி, இந்தச் சட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டும், இந்த அரசும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளைச் சொல்லி உழவர் உழைபாளர் கட்சியின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சியின்போது, இந்த சட்டத்தை-அன்றைய தினம் எல்லாம் பெரிய ஜமீன்தார்கள் மிட்டாதார்கள், மிராசுதார்கள் எல்லாம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைத் தங்களுடைய கையிலே வைத்திருந்தார்கள். அந்தச் சூழ்நிலையிலே இந்த நில உச்சவரம்புச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை — தலைவர் காமராஜ் அவர்களுடைய காலத்திலே கொண்டு வந்து, 5 பேர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு அது எவ்வளவு பெரிய குடும்பமாக இருந்தாலும் சரி, 30 ஏக்கருக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற ஒரு நிலைமையை உருவாக்கி அன்றைக்கு இந்தச் சட்டத்தைச் செய்தார்கள். சட்டம் செய்த பிறகு, மீதியிருந்த, மிச்சமிருந்த நிலங்களை எடுத்தார்களே, அந்த நிலங்களை எல்லாம் பல பேர்களுக்குப் பிரித்து கொடுக்க வேண்டும், பல ஏழைகளுக்கு நிலம் இல்லாத ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிலையை அன்றைக்கு உருவாக்கினார்கள். அப்படி உருவாக்கியபோது, பல இடங்களிலே எடுக்கப்பட்ட நிலங்களை நாம் ஏழைகளுக்குக் கொடுத்தோமே தவிர, அவர்களுக்கு சரியான முறையிலே அந்த நிலத்திலே பண்படுத்தக்கூடிய சூழ்நிலையை— சில பெரியவர்கள், சில மிராசுதார்கள் அந்த நிலங்களை சும்மா சாதாரண நிலமாகக் கூட, இந்த நிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள், அந்த நிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி கொடுத்தது விவசாயத்திற்கு தகுதியற்ற நிலங்களாக அன்றைக்கு இருந்தன. அந்த நிலங்களை எல்லாம் பயன்படுத்தக் கூடிய வகையிலே, அந்த நிலங்களைப் பண்படுத்தி, யார் யாருக்குக் கிணறுகள் வேண்டுமோ, அந்தக் கிணற்றை வெட்டிக் கொடுக்க வேண்டும், பம்ப் செட் வைத்துக் கொடுக்க வேண்டும், அப்படி வைத்துக் கொடுத்து, அவர்களை ஆளாக்க வேண்டும் என்ற காரணத்தாலே, பல திட்டங்களை அன்றைக்குப் போட்டோம், அது செம்மையாக நடைபெறவில்லை என்று நான் அறிகிறேன். பிறகு வந்த ஆட்சியாளர்கள் இந்த 30 ஏக்கரை 15 ஏக்கராக வைத்தார்கள். அந்த 15 ஏக்கருக்குப் பிறகு, எந்த நிலத்தை நாம் உபரியாக எடுத்தோமோ, அந்த நிலம் யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது, எப்படிக் கொடுக்கப்பட்டது, நிலம் இல்லாதவர்களுக்கு கொடுக்கப்பட்டதா — உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று தம்புசாமி அவர்கள் சொன்னார்களே அதைப் போன்று உழுபவர்களுக்கு அந்த நிலம் கிடைத்திருக்கிறதா என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை, எனவே

தயவு செய்து, மீண்டும் இதை மறு பரிசீலனைக்கு எடுத்து, உண்மையிலே யார் யாரிடத்திலே நிலம் அதிகமான அளவிலே இருக்கிறதோ, அந்த நிலங்களை எல்லாம் எடுத்து, நிலம் உழுபவனுக்கே சொந்தம் என்கிற சூழ்நிலையை நாம் உருவாக்கிக் கொடுப்போமானால், அப்போதுதான் இந்த நாட்டில் நிலம் இல்லாதவர்களே இல்லை என்ற நிலைமை வரும். அதாவது உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட்டது என்ற நிலைமையை உருவாக்க முடியும். அவர்களுக்கு வேண்டிய உபகரணங்கள், என்ன என்ன தேவையோ, அத்தனையையும் அரசாங்கமே கொடுத்து, உதவக் கூடிய சூழ்நிலையை உருவாக்கக் கூடிய வகையில், இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 1962-க்கு முன்பு பதிவு செய்யப்பட்ட நிலங்களையெல்லாம் செல்லாது என்ற ஒரு சட்டத்தை இயற்றி, நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஒப்புதலுக்காக அனுப்பி வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அந்த நேரத்தில் நம்முடைய ஒப்பற்ற தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது குறிப்பாக தஞ்சாவூர் போன்ற இடங்களில் பெரிய மிராசுதார்கள் வாழ்ந்த பகுதிகளில் கூலி வேலை செய்து வந்தார்கள். வறட்சி மிகுந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் வாழ்ந்து அங்கே பிழைப்பிற்காக சென்றவர்கள் கூட பெரிய பெரிய சுவான்தார்கள் ஏராளமான நிலத்தை எழுதி வைத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இன்றைக்கு சிறிய சிறிய நிலச்சுவான்தார்களாக சிறு விவசாயிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இன்றைக்கு ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் சொன்னது போல காடாக இருந்த நிலங்களை எல்லாம் விளை நிலங்களாக பக்குவமான நிலங்களாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் மறுபடியும் அவர்கள் கொண்டு வருகின்ற சட்டத்தின் மூலம் ஒரு பாதிப்பு ஏற்படுமோ என்ற ஒரு அச்சம் சாதாரண விவசாயிகள் மத்தியில் நிலவிக் கொண்டிருக்கிறது. இப்போது பெரிய மிராசுதார்கள் என்பவர்கள் எல்லாம் கிடையாது. அத்தனை பேரும் சிறு விவசாயிகளாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே தயவு செய்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் நிலச் சீர்திருத்தச் சட்டத்தையே ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். நான் என்ன செய்வதென்றே புரியாமல் இந்த அவையின் முன்னால் நிறுத்தப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் பேசியதற்கும் இந்தச் சட்ட முன்வடிவிற்கும் எந்தவிதமான சம்பந்தமோ, தொடர்போ எதுவுமே இல்லை. ஆனால் அவர்கள் எல்லாம் இங்கே பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். முதலிலே பேசிய அருமைச் சகோதரர், சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம் சொல்கிறபோது சில விவரங்களைச் சொன்னார்கள். சில நிலம் விவசாய நிலமாக இருக்கிறது. அதைத் தொடர்ந்து அதை தொழிற்சாலையாகச் செய்கிறார்கள். தொழிற்சாலையிலே அரசு அதற்கு விதிவிலக்குக் கொடுத்த பிறகு, அந்தத் தொழில் நொடித்த பிறகு, அந்தத் தொழிலை மாற்றி விடுகிறார்கள். உதாரணமாக செங்கற் காளவாய் வைக்கிறார்கள். அது பூராவும் பள்ளமாகப் போய் விடுகிறது. அதற்குப் பிறகு அது பயன்படுவதில்லை. திருப்பி அதை விவசாய நிலமாக ஆக்குகிறார்கள். இந்த மாதிரி இருப்பதனாலே இதிலெல்லாம் சங்கடம் இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். சுதர்சனம் சொன்ன விவரமெல்லாம் எனக்குப் பூராவும் தெரிந்த விவரங்கள் தான். ஆகையினால்தான் இந்தப் பக்கத்திலே இருக்கின்ற நம்முடைய சென்னை மாநகரத்தைச் சுற்றியிருக்கிற செங்கற் காளவாய் வைப்பதற்கு கேட்டவுடனே, கேட்டவுடனே இந்த அரசு அவர்களுக்கு விதிவிலக்கு கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. அவர்களுக்கு எந்தவிதமான சங்கடமும் ஏற்படவில்லை. இதை இந்த அரசு கவனிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல நம்முடைய அருமைச் சகோதரர் விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது பல்வேறு விவரத்தைச் சொன்னார்கள். உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இப்போதெல்லாம் விஞ்ஞான ரீதியில் நாம் விவசாயம் செய்கிறோம். அதிகமான நிலம் வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கிற சட்டப்படி 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்கிறபோது அதை சாதாரண பிசிகல் ஏக்கராக்குகிறபோது 25 கூட வருகிறது, 30 வருகிறது, 40 வருகிறது. இதில் எல்லாம் எந்தவிதமான சங்கடங்களும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே அவர் இந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இந்தச் சட்ட முன்வடிவிற்கும் அவர் பேசியதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1994 மே 4] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அதுபோல பாலகிருஷ்ணன் அவர்கள் சொல்கிறபோது பால கிருஷ்ணன் அதை மட்டும் சொல்லவில்லை. சட்டத்தையே ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இந்தச் சட்டத் திற்கும் அவர் பேசியதற்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள், நாம் சட்டத்தை நிறைவேற்றி குடியரசுத் தலைவருக்கு அனுப்பி யிருக்கிறோம். அங்கேயிருந்து வரவில்லை என்று சொன்னார் கள். குடியரசுத் தலைவருக்கு அனுப்பியே 2, 2 3/4 வருஷ மாயிற்று. குடியரசுத் தலைவர் என்ன செய்வார்? அவர் பாவம் உட்கார்ந்து இருப்பார்கள். குடியரசுத் தலை வருக்கு மத்தியப் பேரரசு அனுப்பினால் தானே அவர் கையெழுத்து போடுவார். ஆனால் மத்தியப் பேரரசு அனுப்புவதாக இல்லை. நாங்களும் அதை விடுவதாக இல்லை. இங்கே இருந்து நாங் கள் கடிதம் போட்டுக் கொண்டே இருக்கிறோம். நினை வூட்டுக் கடிதமும் போட்டுக் கொண்டே இருக்கிறோம். நானும் கடிதம் எழுதியிருக்கிறேன். சட்ட அமைச்சரும் கடிதம் எழுதி யிருக்கிறார். நம்முடைய அதிகாரிகளும் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருக்கிறார்கள். போகவர விமானச் செலவு தான் மிச்சம். ஆனால் காரியம் ஆனதாகத் தெரியவில்லை. இருந்தாலும் அது நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

பிற்பகல் 12-10

அடுத்தபடியாக, நம்முடைய பெருமதிப்பிற்குரிய திருமதி பொன்னம்மாள் அவர்கள் கூட பேசினார்கள். அவர்கள் இந்தச் சட்டத்திலே நிலம் எங்கெங்கே எடுக்கப்பட்டது— யாருக்குச் கொடுக்கப்பட்டது என்று பேசினார்கள். அது எல் லாம் நிலத்தை எடுக்கிறபொழுது யார் முதலிலே பயிர் செய் கிறார்களோ அவர்களுக்குத் தான் முதலிலே கொடுக்கிறோம். அதற்குப் பிறகு ஆதி திராவிடர்களுக்கு கொடுக்கிறோம். அதற்குப் பிறகு ராணுவத்தினருக்குக் கொடுக்கிறோம். இப்படி வகைப் படுத்திக் கொடுக்கிறோம். ஆனால் இப்போதிருக்கிற சட்டத் தின்படி நில உரிமையாளர்கள் அவர்களுக்கு எந்த நிலத்தை வேண்டுமோ அதை வைத்துக் கொள்ளலாம். அவர்களாகவே எந்த நிலத்தை திருப்பித் தருகிறார்களோ அந்த நிலம்தான் மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அரசு அவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு கொடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்திற்கும் இங்கே சட்ட மன்ற உறுப்பினர்கள் பேசியதற்கும் எந்தவிதமான சம்பந்த மும் இல்லை. ஆனால் இந்தச் சட்டம் என்னவென்றால் தமிழ்நாடு லேண்ட் ரிபார்ம்ஸ் ஸ்பெஷல் அப்பெல்லேட் டிரிப்யூ னல் பற்றியது. மேல் முறையீடு தீர்ப்பு ஆணையம் என்று ஒன்று இருக்கிறது. இது எதற்கு என்றால், இந்த வழக்குகள் எல் லாம் கோர்ட்டிற்குப் போகிற பொழுது, உயர்நீதி மன்றத்திற்குப் போகிறபோது 2 ஆண்டுகள் 3 ஆண்டுகள் ஆகிவிடுகின்றன என் பதாலே கோர்ட்டிற்குப் போகக் கூடாது என்பதற்காகவும் சீக்கிர

[திரு. எஸ் .டி. சோமசுந்தரம்] [1994 மே 4

மாக நடவடிக்கை வேண்டும் என்பதற்காகவும் இந்தத் தமிழ்நாடு லேண்ட் ரிஃபார்ம்ஸ் ஸ்பெஷல் அப்பெல்லேட் டிரிப்யூனலை அமைத்து இருக்கிறோம். ஆகவே இதுபற்றிதானே தவிர உச்ச வரம்புச் சட்டத்திற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. நீங்கள் எல்லாம் சொன்னீர்கள் என்பதற்காக நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அதிலே தமிழ்நாடு லேண்ட் ரிபார்ம்ஸ் ஸ்பெஷல் டிரிப்யூனல் என்றால் அதற்கு ஒரு சேர்மேன் உள்ளார்கள். தலைவர். வைஸ் சேர்மேன் இருக்கின்றார்கள். துணைத் தலைவர், அப்படி இருக்கிறபொழுது தலைவர் எதிர்பாராத விதமாக இறந்து விட்டாலோ அல்லது வேலையை விட்டுப் போய்விட்டாலோ அதற்குப் பிறகு தலைவரின் பொறுப்பு பதவி காலியாகி விடுகிறது. உடனடியாக சில நேரங்களிலே போடுவதற்கு வாய்ப்பு இல்லாவிட்டால் அது காலியாகிவிடும். அப்போது அந்த கோர்ட் நடை பெறாமல் போய்விடும். அதற்காகத் உடனடியாக அந்தத் தலைவர் இல்லாவிட்டாலும், துணைத் தலைவர் அந்தத் தலைவர் என்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டு, தலைவருக்கு எவ்வளவு அதிகாரம் இருக்கின்றதோ அந்த அளவுக்கு எல்லா அதிகாரங்களையும் எடுத்துக் கொண்டு, தலைவரை நியமிக்கின்ற வரையிலும், துணைத் தலைவர் தலைவராக பதவி ஏற்று செயல்படுத்தலாம் என்பதைப் பற்றி மட்டும் தான் இந்தச் சட்டமே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. ஆகவே இந்தச் சட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டிய தேவையில்லை என்பதையும் சொல்லி நான் உங்களையெல்லாம் தவறாகச் சொல்லவில்லை, நிலச் சீர்திருத்தச் சட்டம் என்றாலே நிலத்தை எடுப்பதற்கான சட்டம் என்று எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள், இது அவ்வாறு இல்லை என்பதையும் சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமாய் பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அவையினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர் திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 12/1994) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.